
1st

# திறனொளி

மாதாந்த சஞ்சிகை —————— முடியுமான வரை முயற்சிப்போம்


2017 ஜனவரி – பெப்ரவரி | 25/- | திறன் – 06



## உள்ளே!

ஆரோக்கியமும் சுகவாழ்வும்
கவிதை தூறல்கள்
குர்ஆன் மத்ரஸா அறிமுகம்
மாணவர்களின் ஆக்கங்கள்
வாசகர் வட்டம்
நூல் அறிமுகம்
பல்சுவை அரங்கம்
விளையாடு களம்
களச் செய்திகள்
தீனுல் இஸ்லாம்
பல்துறைத் தகவல்கள்
மருத்துவத் தகவல்கள்
பள்ளிவாசல் அறிமுகம்
பல்துறை சார்ந்தோரின் பேட்டி
முன்பள்ளி பாடசாலை அறிமுகம்

பரிசிலனைப் பெற்றுத் தரும்
திறனொளியின் கேள்வி பதில் மற்றும்
வெற்றியாளர்கள் விபரம்
பக்கம் 14 இல்



Dr. Al-haj. ZA. Bazeer JP
Proprietor

**BAZEER TRAVELS & TOURS**
Agency for Hajj, Umrah Pilgrims
Reg.No: MRCA/Umrah/143/2015



**Eastern Jewellery**
22, Central Road, Sammanthurai-04.
Tel: 0773621628, 0758704065
Branch:-
**Dubai Jewellery**
137/C1 Fawzy Mawatha
Vilinayadi, Sammanthurai.
Tel: 0775503232, 0773621628



அறிவிப்பாளர்கள் தேவை
பக்கம் 15

## திறனொளியின் அன்பான வாசகர்களுக்கு!

அல்லாஹ்வின் உதவியாலும், எமது ஆசிரியர் குழாமின் ஒத்துழைப்பினாலும், அனுசரனையாளர்களின் உந்துதலினாலும் வெளியாகியிருக்கும் திறனொளியின் திறன் 6இன் வாயிலாக வாசகர்களை சந்திப்பதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றோம். அல்-ஹம்துலில்லாஹ்...!

எமது திறனொளி ஊடக வலையமைப்பின் விஷ்தரிக்கப்பட்ட சேவையாக கலை கலாசார மற்றும் ஊடகப் பயணமாய் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் இணையத்தில் உதயமாகிறது ஆஸாத் FM இணையத்தள வானொலி சேவை. இதற்காக ஒத்துழைப்பு வழங்கும் அனைவருக்கும் திறனொளி நன்றிப் பூக்களைச் சொரிகிறது. எமது ஆஸாத் FM இணைய வானொலி சேவையினை உலகளாவிய ரீதியில் இருக்கின்ற எமது அன்பு சொந்தங்கள் கேட்டு மகிழலாம் www.aazathfm.com என்கின்ற இணையத் தளத்தை பிரவேசிப்பதனூடாக.

நன்றி

அன்புடன்

ஆசிரியர்

## திறனொளி 1st

சஞ்சிகைக் குழு

முகாமையாளர்

பிரதம ஆசிரியர்

**கலைச்சுடர் ஏ.சி.நௌஷாத்**

(அறிவிப்பாளர்)

ஆசிரியர் குழு

எஸ்.அப்துல் றாஸீக் JP

(ஓய்வு பெற்ற அதிபர்)

எப்f.எம்.இஹ்ஸான்

இஸ்மாயில் எம் நையூப்f

மௌலவி ஏ.ஆதம்பாவா (B.A)

மௌலவி எம்.ஐ.எம்.கலீல் (தப்லீகி)

அல்-ஹாபிழ் பி.எம். பர்ஹானுத்தீன்

ஐ.எம்.இம்டியாஸ்

எச்.எம்.நாஸிக்

ஐ.நஸ்றுல்லாஹ் இஸ்மாயில்

கவிதாயினி எம்.ஐ.றமீஸ் நிசா Tr

ஆலோசகர்

கலாபூஷணம் மாறன் யூ ஸெயின்

(ஓய்வு பெற்ற அதிபர்)

## சம்மாந்துறை பிரதேச பாடசாலைகளின் அபிவிருத்திக்கு 45 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பக் கல்வி கற்றல் வள நிலையம் நிர்மாணம்



சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகத்தின் கீழுள்ள சம்மாந்துறை பிரதேச பாடசாலைகளுக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் சம்மாந்துறை பிரதேச பாடசாலைகளின் அபிவிருத்திக்கு 45 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பக் கல்வி கற்றல் வள நிலையம் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட இருமாடிக் வகுப்பறை கட்டிடத்தினை திறந்து வைக்கும் வைபவம் கடந்த அண்மையில் இடம்பெற்றது.


கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிரின் அழைப்பின் பேரில் சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.எஸ்.நஜீமின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமட், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம். மன்சூர் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டு அடிக்கல்லினை நட்டி வைத்தனர். அல்-முனீர் வித்தியாலயம், தாறுஸ்ஸலாம் மகா வித்தியாலயம் மற்றும் அல்-ஹம்றா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு தலா 12 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பக் கல்வி கற்றல் வள நிலையத்திற்கான இருமாடிக் கட்டிடம் அடிக்கல்லினை நாட்டி வைத்ததுடன், மற்றும் செந்நெல் ஸாஹிறா வித்தியாலயத்தில் உலக வங்கியின் நிதியொதுக்கீட்டின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட இருமாடி வகுப்பறைக் கட்டிடத்தினை வைபவ ரீதியாக திறந்து வைத்தனர். இந்நிகழ்வில்அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள்மற்றும்மாணவர்களும்கலந்துகொண்டனர்.

அனஸ் (ரழி) அவர்கள்

அறிவிக்கிறார்கள்:

“எல்லா மனிதர்களும் தவறு செய்பவர்களே! தவறு செய்பவர்களில் சிறந்தவர்கள் மன்னிப்பு தேடுபவர்களே” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(திர்மிதி)




Editor
Thiranoli 1st
112, Firthous Palli Road
Sammanthurai - 03
Hot Line :- 067 490 54 03
E-mail:- nowshadacareem@gmail.com

# களச் செய்திகள்

தயாரிப்பு - இஸ்மாயில் எம் நையூப்

## தேசிய மட்டத்தில் கமு /சது / தாறுஸ்ஸலாம் மஹா வித்தியாலயம் வரலாற்றுச் சாதனை






இலஞ்சம் அல்லது ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவும், கல்வி அமைச்சும் இணைந்து நாடாளாவிய ரீதியில் ஆக்கத் திறன் போட்டிக்கான விண்ணப் பங்கள் கோரப்பட்டன. இதில் மட்டுப்படுத்தப்பட்ட, திறந்த மட்ட என இரு பிரிவாக ஆக்கத் திறன் போட்டிகள் இடம்பெற்றன மட்டுப்படுத்தப்பட்ட போட்டியில் தமிழ் மொழி மூல கட்டுரை ஆக்கத்தில் முதல் இடத்தை செல்வி MT. பாத்திமா நுஸ்ரத் பெற்றுக் கொண்டார்.கவிதை ஆக்கத்தில் செல்வி MS. நளீபா ரம்சாத் பெற்றுக் கொண்டார்.திறந்த மட்டப் போட்டியில் அம்மாணவர்களை வழி நடாத்திய ஆசிரியர் MI.அச்சி முகம்மட் பாடலாக்கத்தில் முதல் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

அகில இலங்கை மட்டத்தில் மூன்று வரலாற்றுச் சாதனைகளை பாடசாலை படைத்துள்ளது. அவர்களுக்கான கௌரவம் கடந்த 09.12.2016 வெள்ளிகிழமை. பிற்பகல் 2 மணிக்கு ஹோட்டல் தாஜ் சமுத்திராவில் நடைபெற்றது. வெற்றி ஈட்டியோர்களுக்கான பரிசில்களும் சான்றிதழும் சட்டம் ஒழுங்கு அமைச்சர் கௌரவ சாஹல ரத்நாயக்க அவர்களால் வழங்கி வைக்கப்பட்டது. இவர்களுக்கு திறனொளி பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.



திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம். மன்சூரின் 2016 ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக் கீட்டின் கீழ் சமூக சேவை அமைப்புக்கள், அறபு கல்லூரிகள், பள்ளிவாசல்கள், மகளிர் சமூக சேவை அமைப்புக்கள் மற்றும் விளையாட்டுக்கழகங்களுக்குகென 27 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் சம்மாந் துறை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் ஏ.மன்சூர் தலைமையில் இடம்பெற்றது.இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம்.மன்சூர், சம்மாந்துறைப் பிரதேசதத்தைச் சேர்ந்த சமூக வேவை அமைப்பு க்கள், அறபு கல்லூரிகள், பள்ளிவாசல்கள், மகளிர் அமைப்புக்கள் உட்பட 22 அமைப்புக்களுக்கு பொருட்களை வழங்கி வைத்தார்.

இங்கு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம்.மன்சூர் உரையாற்றுகையில், சம்மாந்துறை பிரதேச செயலாளர் பிரிவின் அபிவிருத் திக்கு 09 பாராளுமன்ற உறுப்பினர்கள் 2016ஆம் ஆண்டிற்கான தமது பன்முகப்படத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதியிலிருந்து ஒரு கோடியே 14 இலட்சத்தி 60 ஆயிரம் ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்துள்ளனர். அதில் எனது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டி லிருந்து சம்மாந்துறை பிரதேசத்தின் கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசனம், பாதை அபிவிருத்தி உட்பட பல்வேறு துறைகளின் அபிவிருத் திக்கென 40 வேலைத்திட்டங்களுக்கு சுமார் 92 இலட்சத்தி 60 ஆயிரம் ரூபாய் 82 வீதமான நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளேன். கடந்த எட்டு வருடகாலமாக சம்மாந்துறைக்கான பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் இன்மையால் பல்வேறு துறைகளில் சம்மாந்துறை மண் அபிவிருத்தியில் பின்னடைந்து காணப்படுகின்றது. அதனை அபிவிருத்தியில் செழிப்புள்ள நகரமாக மாற்றுவதே எனது தலையாய பணியாகும். அதற்கு அரசியல் வேறுபாடுகளின்றி அணைவரும் என்னோடு இணைய வேண்டும். இந்நிகழ்வில் பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர்களான கே.எல். ஹம்ஸா, எம்.ஐ.மஜீத், கணக்காளர் எம். மஹ்றுப், பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர்களான சட்டத்தரணி எம்.ஜௌபீர், யு.எல். பஸீர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், உலமாக்கள், சமூக சேவை, மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# பள்ளிவாசல் அறிமுகம்




தயாரிப்பு:-
எஸ்.அப்துல் றாஸீக் JP (ஓ.அதிபர், மு.தவிசாளர்- மஜ்லிஸ் அஷ்ஷூறா)

## கலந்தரப்பா பள்ளி

இப்பள்ளி வாசல் மல்கம்பிட்டி கிராமத்தில் அமைந்துள்ளதாகும். கலந்தர் சிக்கந்தர் அவுலியாக்கள் அடக்கஞ் செய்யப்பட்டுள்ளதால் கலந்தரப்பா பள்ளிவாசல் என அழைக்கப்பட்டு வரலாயிற்று. கலந்தர் சிக்கந்தர் என்பது ஒரு பெயரென பலர் நினைப்பதுண்டு. அப்படியல்ல. கலந்தர் ஷா. சிக்கந்தர் ஷா என்பதுதான் அவர்களின் பெயர் . இவர்கள் சகோதரர்கள் என்றும். குரு. சிஷ்யர்கள் என்றும் பல கருத்துக்கள் உண்டு. இவர்களது பெயர்களைக் கொண்டு பாரசீகத்திலிருந்து வந்திருப்பார்களென்று ஊகிக்க முடிகின்றது. பெரிய பள்ளியில் அடங்கப்பெற்ற கோசப்பா எவ்வாறு சம்மாந்துறை துறைமுகத்தில் வந்திறங்கினார்களோ அவ்வாறே கலந்தர் சிக்கந்தர் அவுலியர்களும் வந்திருப்பர். கோசப்பா 1500ஆம் ஆண்டலவில் வந்திருந்தால். கலந்தர் சிக்கந்தர் அவர்கள் 1700 பிற்பகுதியில் வந்திருக்கலாம். சம்மாந்துறையிலிருந்து ஐந்து பாதைகள் கண்டி இராச்சியத்திற்கு செல்வதான வரலாறுகளில் மல்கம்பிட்டி பாதையும் ஒன்று. அதனால். இப்பாதையூடாக வந்த இவர்கள் இங்கு தங்க வேண்டிய அல்லாஹ்வின் ஏற்பாடாகவிருந்திருக்கும். மல்கம்பிட்டியின் பெயர் வரலாற்றை நோக்குவோம். பொலநறுவையை ஆண்ட கூத்திகன் மன்னன் அவனுடைய ஆட்சிக்குட்பட்டிருந்தது சம்மாந்துறை பிரதேசம். சம்மாந்துறைப் பிரதேசத்தின் ஒரு பகுதி மட்டக்களப்பு ஆகும். (இன்றைய மட்டக்களப்புதரவையாகும். ) இன்றைய மட்டக்களப்புக்கு அன்றையப் பெயர் புளியந்தீவு. போர்த்துக்கீசக் கோட்டை கட்டியதும். சம்மாந்துறையிலிருந்த மட்டக்களப்பு புளியந்தீவுக்கு மாற்றப்பட்டுள்ளது. மட்டக்களப்பு. மட்டக்களப்புதரவையானது. கூத்திக மன்னன் அன்றைய மட்டக்களப்பு துறையை செப்பனிடுவதற்காக பாரிய பரப்பளவுடையதாக இருந்த ஒரு பிட்டியில் மண். கல் எடுத்து செப்பனிட்ட வரலாறு உண்டு. அதனால்தான் மண். கல் பிட்டி மல்கம்பிட்டியானது என்பதும் ஒருவரலாறு உண்டு. மல்கம்பிட்டியில் வாழ்ந்த முன்னோர்களின் பரம்பரையாக வந்த செவிவெளி செய்திகளின் ஊடாக பெறப்பட்ட "மல்கம்பிட்டிக்கான பெயர் வரலாற்றைப் பார்ப்போம். "மலுக்கன்" என்பவன் பெருமளவில் மாடுகளைக் கட்டிய இடம்தான் (திடல்) மலுக்கன்பிட்டி என்பது திரிபடைந்து மல்கம்பிட்டியாக பெயர் பெற்றதெனலாம்.மலுக்கன் மாடுகள் கட்டிய அவ்விடத்தில் அன்று மக்கள் வசித்ததாக இல்லை. அப்போதைய கால கட்டத்தில்தான் கலந்தர். சிக்கந்தர் பெரியார்கள் இப்பிட்டியில் , திடலில் ஒரு மர நிழலில் தங்கி இழைப்பாறினர். அப்போது மலுக்கன் அவனது உதவியாளர்களுடன் மாடுகள் கட்டிக் கொண்டிருந்த காலம். அவனது மாட்டுப் பட்டியில் வெள்ளை நிறத்தையுடைய அபூர்வ எருமை மாடு ஒன்றும் இருந்தது. அதனுடைய பாலை நாளாந்தம் கறந்து தனது போடிக்கு சம்மாந்துறைக்கு அனுப்பி வைப்பது வழக்கம். கலந்தர் சிக்கந்தர் இருவரும் தங்களுக்கு பசிக்கு வெள்ளை எருமையில் கறந்த பாலைத் தருமாறு மலுக்கனிடம் கேட்டனர். ஆனால் அவன் இப்பால் தனது போடிக்கு அனுப்ப வேண்டியதால். வேறு மாட்டிலிருந்து கறந்து தருவதாக கூறினான். அதை மறுத்த இவர்கள் பால் அருந்தாமலே இருந்து விட்டனர். போடிக்கு கறந்து வைத்த வெள்ளை எருமையில் பால் பழுதடைந்து விட்டது. பால் போடிக்குப் போக வில்லை. மலுக்கனும் போடியைச் சந்திக்க வில்லை. இதை அறிந்த போடி மல்கம்பிட்டி சென்றார். அங்கு மாடுகள் எதையும் காணவில்லை. மலுக்கனும் அவனது உதவியாளர்களும் மாத்திரம் இருந்தனர். நடந்தவற்றை அறிந்த போடி கலந்தர் சிக்கந்தரை சந்தித்து மன்னிப்பு கோறினார். மாடுகளும் கிடைத்தது. மலுக்கனும் அவனது மாடுகளும் அவுலியாக்களின் வேண்டுதலுக்கு செவிசாய்ந்து வேறிடத்திற்குச் சென்றனர். மலுக்கனின் போடி இவ் அவுலியாக்களுக்கு மதிப்பளித்து. கண்ணியப்படுத்தி அவர்கள் தங்குமிடம் அமைத்துக் கொடுத்ததுடன் , சம்மாந்துறை பள்ளிவாசல் தலைமைத்துவத்துடனும் கலந்துரையாடினார். சம்மாந்துறையிலிருந்து மக்களை அங்கு குடியேற்றுமாறும். அவுலியாக்களின் பராமரிப்புக்காகவும் வயல் நிலங்களையும் பெரிய பள்ளிக்கு அன்பளிப்புச்செய்தார்.இதிலிருந்து மக்கள் இங்கு குடியேறத் தொடங்கினர். இதிலிருந்து மல்கம்பிட்டியில் உள்ள கலந்தர் சிக்கந்தர் சியாரம் கிழக்கில் பிரசித்தமானதாக விளங்கின. பல ஊர்களில் இருந்தும் முஸ்லீம். தமிழ் மக்கள் இச்சியாரத்தை தரிசித்துச் செல்லும் வழக்கம் ஏற்படலாயிற்று. இக் காலகட்டத்தில் வெளிகாமத்தைச் சேர்ந்த மௌலானா ஒருவர் (மாவடிப் பள்ளியில் இருந்த மௌலானாவின் உறவினர்) தாம் கனவு கண்டதாக கூறி . மல்கம்பிட்டியில் காலடி எடுத்து வைத்தார். வருடா வருடம் கொடியேற்றி. கந்தூரி கொடுத்து , பள்ளிவாசலுக்குரிய சுமார் 70 ஏக்கர் வயல் நிலங்களையும் பராபரித்துக் கொண்டு ஆண்டு அனுபவித்துக் கொண்டிருந்தார். இதனால் மேலும் மல்கம்பிட்டி சியாரமும். ஊரும் பிரசித்தம் பெறலாயிற்று. சம்மாந்துறையின் தலைவராகவும் பெரிய பள்ளி தலைவராகவும் அப்போதிருந்த உமர்லெவ்வைப்போடி மரைக்காரால். மௌலானாவை எதிர்த்து பள்ளிக் காணிகளை மீட்டெடுக்கும் முயற்சியில் ஈடுபட வில்லை. காரணம் மௌலானாவினால் தனக்கு ஏதும் ஏற்பட்டு விடலாம் என்ற அச்சம். ஆனால். உமர்லெவ்வைப் போடிக்கு பின் ஊர். பள்ளிவாசல் தலைவராக இருந்த அவரது மகன் சுலைமாலெவ்வை ஆலிம் அவர்கள் , சமாதானத்தின் மூலம் பெற முடியாதிருந்த பள்ளிக் காணிகளை மட்டக்களப்பு நீதிமன்றம் மூலம் மீட்டெடுத்தார். இது போல் 1985ஆம் ஆண்டில் சுலைமா லெவ்வை ஆலிமின் பேரன் சுலைமா லெவ்வை சேமன் சம்மாந்துறை பள்ளிவாசல்களின் தலைவராக இருந்த போது மல்கம்பிட்டிக் காணி மல்கம்பிட்டி ஊர் மக்களுக்கே உரியது என்ற கோசம் மேலோங்கியது. அவரும் வழக்காடி காணியை மீட்டெடுத்தார். இவ்வாறு வரலாற்றையுடைய மல்கம்பிட்டி கிராமம் 1989இல் இப்பிரதேசத்தில் ஏற்பட்ட இன வன்செயலினால் , அம்மக்கள் வெளியேறி இன்றுவரை சம்மாந்துறையில் வாழ்ந்து வருகின்றனர். இருந்தாலும். வெளியூர் உள்ளூர் மக்கள் சியாரத்தை தரிசிப்பதற்காக வந்து செல்கின்றனர். கபூர் ஸ்தானங்கள் நமது அடையாளங்கள் நமது இருப்பின் அத்தாட்சிகள். எமது தொன்மையின் எடுத்துக்காட்டுகள். ஆனால். கபூர் வணக்கங்கள் தடுக்கபட வேண்டியவையாகும். வயல் வெளிகளுக்கு மத்தியில் அமைந்துள்ள மருத நில சுவாசம் மீண்டும் கட்டியெழுப்பப்பட வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ளல் அவசியத்திலும் அவசியமாகும். எவ்வளவு பிரச்சினைகளுக்கு மத்தியிலும் கலந்தர் சிக்கந்தர் கபூர்கள் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. இது தவிர இவ் அவுலியாக்களுக்கு தொண்டூழியஞ் செய்து வந்த கட்டப் பக்கீர் வாவா. அலிமருங்கர் அப்பா. சமையல் வேலைகள் செய்து வந்த அசானியா உம்மா என்பவர்களின் கபூர்களும் வெளிவளவில் இன்று வரை அடையாளங்களாக காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன. என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஆரோக்கியமும் சுகவாழ்வும்

தயாரிப்பு : Dr. MCM. காலித் (BUMS-SL)



திறன் 05 இன் தொடர்ச்சி

## மூச்சுக்கஷ்டம் (Asthma)

மூச்சுக்கஷ்டம் உள்ளவர்கள் தவிர்க்க வேண்டிய அல்லது விரும்பத்தகாத உணவுகள் பின்வருமாறு.

1)கத்தரிக்காய், தக்காளி, பீற்றூட், இராசவள்ளி, வெண்டிக் காய், பீர்க்கங்காய், சுரைக்காய், கொத்தவரை, வெங்காயப் பூ, கக்கரிக்காய், முள்ளங்கி போன்ற காய் கறிகள்.

2)பசளி இலை, அகத்தியிலை, சிறு கீரை, வள்ளல், போன்ற இலைக்கறிகள்.

3)அன்னாசிப்பழம், தக்காளிப்பழம், கொய்யாப்பழம், நாவல்பழம், ஜம்புப்பழம், வெள்ளரிப்பழம், றம்புட்டான்பழம், வத்தப்பழம், மங்குஸ்தான்பழம், அன்னமுன்னா (ஓணாப் பழம்), ஆனைக்கொய்யா(பட்ட புறூட்), யானை வாலைப்பழம் போன்ற பழவகைகள்.

4)எள்ளு – மருந்தை முறிக்கும் குணம் உள்ளதால் உட்கொள்ளக் கூடாது.

5)ஒவ்வாமை (கிரந்தி) தன்மையுடைய நண்டு, இறால்,சூடை மீன், கீரி மீன், சூரை மீன், கணவாய், கிளவல் மீன், இறைச்சி வகைகள் போன்ற உணவுகள்.

6)குளிர்ந்த நீர் பருகுதல் கூடாது.

7)பசுப்பால், செம்மறி ஆட்டுப்பால், எருமைப்பால், தயிர் தவிர்க்கப்பட வேண்டும், ஆனால் பசுப்பாலுடன் மிளகு, கற்கண்டு சேர்த்து காய்ச்சி ஆடை நீக்கியபின் அருந்த லாம்.

8)இளநீர் – குளிர்த்தன்மை அதிகம் என்பதால் தவிர்க்க வேண்டும்.

9)குரக்கன்,சவ்வரிசி போன்றவற்றால் தயாரிக்கப்பட்ட உணவுகளை தவிர்த்தல் நன்று.

10)ஆட்டிறைச்சி அதிக குளிர்த்தன்மை கொண்ட குணமுள்ளதால் தவிர்த்தல் நன்று.

11)மலச்சிக்கல், வயிற்றுப் பெருமல் (வாயு) ஆஸ்துமா நோயை அதிகரிக்கும் தன்மை கொண்டுள்ளதால் மலச்சிக் களை உண்டாக்கும் உணவுகளை தவிர்த்து நார்த் தன்னையான உணவுகளை அதிகமாக உண்ணு தல் வேண்டும். வயிற்றுப் பொருமலை தவிர்க்கும்முகமாக வெள்ளைப்பூண்டு, பெருங்காயம், மிளகுத்தூள் போன்ற வற்றை உணவுடன் சேர்த்து சமைக்க வேண்டும்.

12)நிறமூட்டப்பட்ட குளிர்பானங்கள் ஒவ்வாமையை ஏற்ப டுத்து வதாலும், குளிர்த்தன்மை மூச்சுக்கஷ்டத்தை அதிகரிப்பதாலும் தவிர்த்தல் நன்று.

13)ஐஸ்கிறீம், ஐஸ்பழம் போன்றவற்றை தவிர்த்தல் நன்று.

### Asthma உள்ளவர்களுக்கான சில குறிப்புக்கள்

1)ஒவ்வொரு மனிதனும் தன் ஒவ்வாமை உணவுளை தாமே அறிந்து வைத்திருத்தல் வேண்டும். எல்லோருக்கும் எல்லா உணவுகளும் ஒவ்வாமையை ஏற்படுத்தாது. சில உணவுகள் சிலருக்கு ஒவ்வாமையை உண்டுபண்ணும்.

2)வெள்ளாட்டுப் பாலை, வயதிற்கேற்ப (5ml - 100ml) அளந்து எடுத்து சம அளவு நீர் கலந்து நன்கு காய்ச்சி ஒரு வேளை குடித்தல் நன்று.

3)வேப்பிலை, வில்வ இலை, துளசி இலை, தூதுவளை இலை, ஆடாதோடை இலை, கற்பூரவள்ளி இலை, சுக்கு, மிளகு, மஞ்சள் சேர்த்து காய விட்டு தூளாக்கி வைத்துக் கொண்டு தேக்கரண்டியளவு எடுத்து வெந்நீரில் ஊறவிட்டு வடித்து காலை, மாலை பானமாகப் பருகலாம்.

4)அதிகமாக தூசு படியக்கூடிய உடைகளை அணிவது தவிர்க் கப்பட வேண்டும். அத்தோடு தளர்வான ஆடைகளை அணிவது நன்று.

5)அதிக குளிர்ப் பிரதேசங்களில் அல்லது AC பூட்டப்பட்ட அறைகளில் வாழ்வதைத் தவிர்த்தல்.

6)குளிர் நீரில் நீராடாது வெந்நீர் கலந்த நீரில் அல்லது அளவான சுடுநீரில் நீராடுவது சிறந்தது.

7)சிகரெட், பீடி, சுருட்டு புகைத்தல், மது அருந்துதல், போதை வஸ்து பாவனை போன்ற விடயங்கள் கண்டிப்பாக தடை செய்ய வேண்டும்.– தவிர்க்கப்பட வேண்டும்.

8)உணவு உண்ட பின் உப்பு கலந்த நீரினால் வாய் கொப்பளிக்க வேண்டும்.

9)அதிக உடற்பயிற்சி கூடாது.


10)உடலுறவில் அதிக நாட்டம் ஏற்புடையதல்ல.

11)அதிக மனக்கவலை, மன உளைச்சல், மன அழுத்தம் அதிகரித்தல் போன்றவற்றிலிருந்து விடுபடுதல் வேண்டும்.


12)Asthma நோயுள்ளவர்கள் meditation (மூச்சுப்பயிற்சி), Yoga (யோகாசனம்) போன்றவற்றில் ஈடுபடுதல் சிறந்த பயனை அளிக்கும்.




IFHAM ENTERPRISES
இப்ஹாம் என்டபிரைசஸ்



அனைத்துவித மூலிகை மருந்து மாத்திரைகள், பட்டோலைச் சரக்குகள், வாசனைத் திரவியங்கள், அரிதான மூலிகைகள் உட்பட மூக்குக் கண்ணாடிகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள



இப்ஹாம் என்டபிரைசஸ்
ஹிஜ்ரா சந்தி
பொலிஸ் வீதி
சம்மாந்துறை
தொ.இல:- 0672260615/ 0771895865.

# மாணவர் பல்சுவை அரங்கம்



## வெள்ளை நிற நாய்க்குட்டி

வேலு மாமா ஊருக்கு போய் வரும் போது வெள்ளை நிற நாய்க்குட்டி ஒன்றைக் கொண்டு வந்தார். அது ஒரு குறும்புத் தனமான நாய்க்குட்டி. அந்த நாய்க்குட்டியின் குறும்புத்தனத்தால் வீட்டில் இருந்த பூனைக்குட்டிக்கு சரியான இடைஞ்சலாக இருந்தது. அந்த வெள்ளை நிற நாய்க்குட்டி வீட்டுக்குவர ஒருவருக்கும் இடம் கொடுக்க வில்லை. யாரைக் கண்டாலும் குரைக்கும். இதனால் மரங்களில் இருந்த குருவிகளுக்கும், அணில்களுக்கும் வெள்ளை நாய்க்குட்டி என்றால் சரியான பயம். ஒரு நாள் ஒரு பெட்டைக் கோழி உணவு தேடிக் கொண்டு அதன் வழியே போகும் போது வெள்ளை நிற நாய்க்குட்டி ஓடி வந்து சின்னக் கோழிக் குஞ்சை வாயால் கௌவியது. பாவம் கோழிக் குஞ்சு நாய் கௌவியதால் அந்தக் கோழிக்குஞ்சுக்குக் காயம் ஏற்பட்டது. ஆதனால் அன்று தொடக்கம் கோழி நாய்க்குட்டியோடு கோபம் கொண்டது. இதை கேள்விப்பட்ட வேலு மாமா ஒரு தடியால் அடித்தார். அதை நாய்க்குட்டி ஒரு படிப்பினையாக எடுக்கவில்லை. அதெல்லாம் அந்த நேரத்துக்குத்தான். மாமா பின்னர் அதை மறந்து விட்டார். மீண்டும் ஒரு நாள் கோழிக்குஞ்சுகளை தாக்க ஒழித்து நின்று எத்தனித்தது. அன்று கோழிக்கு அடக்க முடியாத கோபம். வெள்ளை நிற நாய்க்குட்டியை துரத்திக் கொண்டு நல்ல காயங்கள் ஏற்படும் வரை கொத்தியது. அதைக்கண்ட வேலுமாமா ஓடிவந்து வெள்ளைநிறநாய்க்குட்டியை காப்பாற்றினான். அன்று முதல் நாய்க்குட்டி நல்ல பாடத்தை கற்றுக் கொண்டது.

S. அஹ்னப்
அல் - ஹிலால் வித்தியாலயம்,
சாய்ந்தமருது

## இலங்கையில் உள்ள மாகாணங்கள்

1- வடக்கு மாகாணம். 2- கிழக்கு மாகாணம்
3- வட மத்திய மாகாணம் 4- ஊவா மாகாணம்
5- வடமேல் மாகாணம் 6- மத்திய மாகாணம்
7- தென் மாகாணம் 8- மேல் மாகாணம்
9- சபரகமுவை மாகாணம்

## இலங்கையில் உள்ள மாவட்டங்கள்

1- கொழும்பு 2- கம்பஹா 3- களுத்துறை 4- கண்டி
5- மாத்தளை 6- நுவரெலியா 7- காலி 8- மாத்தறை
9- அம்பாந்தோட்டை 10- யாழ்ப்பாணம் 11- மன்னார்
12- வவுனியா 13- முல்லைத்தீவு 14- கிளிநொச்சி
15- மட்டக்களப்பு 16- அம்பாறை 17- திருக்கோணமலை
18- குருநாகல் 19- புத்தளம் 20- அனுராதபுரம்
21- பொலன்னறுவை 22- பதுளை 23- மொனராகலை
24- இரத்தினபுரி 25- கேகாலை

எல்.எப்.எச்.சினோபா
சம்மாந்துறை



## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### சிங்கம் போல் செயற்படு

* எல்லா விதமான அறிவும், ஆற்றலும் மனிதனுக்குள்ளே இருக்கிறது என்று வேதாந்தம் பறை சாற்றுகிறது.
* செம்மறி ஆடுகள் போல இருக்க வேண்டாம். மயக்கத்தை உதறி விட்டு சிங்கம் போல வீரமாகச் செயற்படுங்கள்.
* மூளை, தசை,நரம்பு என உடம்பின் எல்லா பாகத்திலும் இலட்சிய சிந்தனை நிறைந்திருக்கட்டும்.
* பசியால் வாடும் மனிதனிடம் ஆன்மீகம் பேசுவது ஒருவனை அவமதிப்பதற்குச் சமம்.
* தெய்வீக சிந்தனை இல்லாவிட்டால் மனிதனின் அறிவும், ஆற்றலும் கீழ் நோக்கிச் சென்று விடும்.

## PROVERBS - பழமொழிகள்

அனுபவமே அறிவை அளிக்கும்
Experience is the mother of wisdom

பிறப்பிலும் இறப்பிலும் அனைவரும் சமம்
Death is a great leveler

தயங்கி நிற்பவன் தோற்று நிற்பான்
He who hesitates. loses

மடமைக்கு மருந்தில்லை
He who is born a fool is never cured

புகழ் இழந்தவன் பாதி இறந்தவன்
He that has an ill name is half hanged

*HM.NASIR - Sammanthurai*

ஆக்கங்களை எழுதி அனுப்பி பரிசினை பெற்றுக்கொள்ளுங்கள். அனுப்ப வேண்டிய முகவரி
"மாணவர் பல்சுவை அரங்கம்"
திறனொளி
112, பிரதௌஸ் பள்ளி வீதி,
சம்மாந்துறை-03


## அஜ்வா ட்ரவல்ஸ்


முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தினால் அங்கீகாரம் பெற்ற எமது அஜ்வா ட்ரவல்ஸ் நிறுவனம் இம்முறையும் புனித உம்ரா யாத்திரைக்கான சகல ஏற்பாடுகளையும் செய்து முடித்துள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். சுமார் 25 வருட கால ஹஜ் உம்ரா சேவையில் மிகுந்த அனுபவம் பெற்ற அல்-ஹாஜ் மௌலவி கே.எம்.நியாஸ் அல்-ஹாஜ் மௌலவி எம்.ஸஹ்ரான் ஹஸன் ஆகியோரின் நேரடி வழிகாட்டலில் உம்ரா செய்வதற்கான அறிய வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்

Al-Haj Moulavi KM.Niyas
077 17 680 44 - Sammanthurai

Al-Haj Moulavi KL.Atham Bawa
077 66 240 17 - Sammanthurai

Al-Haj Moulavi IL.Mansoor
077 52 150 14 - Sammanthurai

Ajwa Travels
(Airline Ticketing Hajj & Umrah Operators)
#463, 2nd Floor, Maradana Road, Colombo-10.
Tel : 0117 446322, 0771768044
E-mail : hairiyaumra2014@gmail.com / ajwatravels@yahoo.com
0729593677 (Whatsapp)



# விளையாடு களம்

**தயாரிப்பு:- ஏ.ஐ.ஏ.சுஹைல் (Bsc)**

**விளையாடு களத் தகவல்கள் அடுத்த திறனில் தொடரும் என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகிறோம்.**

–ஆசிரியர்–




கடந்த நவம்பர் மாதத்தில் சம்மாந்துறை பிரதேச சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய வாசிப்பு மாத போட்டிகளுக்கான சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கும் நிகழ்வுகள் கடந்த 11.11.2016ல் பிரதேச சபையின் செயலாளர் ஜனாப் A.A.சலீம் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாரை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஜனாப். A.T.M. ராபி அவர்கள் பிரதம அதிதியாகவும், சிறப்பு அதிதிகளாக தென்கிழக்குப் பல்கலைக்கழக உதவி நூலகர் ஜனாப் A.M. நஹ்பீஸ் அவர்களும், அதிதிகளாக நம்பிக்கையாளர் சபைத் தலைவர். Dr. MY. முஸ்தபா, Dr. M.C.M. காலித் ஆகியோர் கலந்து கொண்டனர்.





**அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் இரண்டு வருட பூர்த்தியை முன்னிட்டு சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மர நடுகை நிகழ்வு கடந்த 10-01-2016ம் திகதி சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு உபுல் பியலால் தலைமையில் நடைபெற்றது. சம்மாந்துறையின் பிரதான பாதை ஓரங்களில் மரங்கள் நட்டு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.**

**(தகவல்: நௌஷாத் ஏ கரீம்)**



# கவிதை தூறல்கள்

தயாரிப்பு - கவிதாயினி எம்.ஐ. நமீஸ் நிஷா

## உன்னையே செதுக்கு!

புத்தகப் பூக்களை விரித்து விடு - அதில்
புகன்றிடும் தேன் மதி குடித்து விடு
எத்திசை பிறந்திட்ட போதும் - உன்னை
ஏற்ற முறச் செய்யும் அது எப்போதும்
கற்றவன் சிறப்பினை ஔவ்வை - வெண்பாக்
கவிதையிற் சொன்னாளே அன்று
தெற்ற அறிவினைப் பெற்று - நண்பாத்
தேசம் மலஉந்திடப் புரிந்திடு தொண்டு


பெற்றிடும் தாய் நிகஉ நம் நாடு - உன்
பெயரது விளங்கிடப் புரிந்திடு பாடு
சுற்றிடலாம் இந்த வையம் - என்றும்
சுறு சுறுப்பாய் விரி இரு கையும்
வறுமைக் கனலது சூழும் - அதில்
வதைபட்டுப் போகலாம் நாளும்
பொறுமையினால் அதை வெல்லு - அதைப்
புகன்றிடும் திருக்குறள் சொல்லு

கற்கின்ற நேரத்தில் கல்லு - உன்
கடமை தவறாமல் எப்போதும் நில்லு
பொற்காலம் வந்து உன்னைத் தேடும் - பின்
புண்பட்ட வறுமை பாய்ந்து பறந்தோடும்
வேதங்கள் சொல்லுவது ஏற்று - அதை
விளங்கிப் பொங்கிடும் அறிவெனும் ஊற்று
வாத குரோதங்களை நிறுத்து - இந்த
வாழ்க்கை வாழுத்தான் என்பதன் கருத்து

பத்து விரல்களும் மூலதனம் - நம்மைப்
படைத்தவன் தந்த உயஉந்த சீதனம்
சொத்தாகக் கொள்வதே கல்வி - உனை
சோபனம் செய்து உயஉத்திடும் செல்வி
நேரத்தை உயிரென நம்பு - இறை
நேசனாய் வாழ்ந்திடப் பிறந்திடும் தெம்பு
கோரத்தால் விளைகிற வம்பு - உனை
கோதென ஒதுக்கிடும் சாயலில் தும்பு

ஞானத்தில் மூழ்கிடு நீயும் - புது
ஞாயிறாய் உதித்திட கறையது மாயும்
மானத்தில் பிறந்தது அறிவு - அதை
மதித்து எடுப்பது சரியான தெரிவு
நிசங்களை வாழ்க்கையில் தேடு - அதில்
நிம்மதி கிடைக்கும் என்பதைப் பாடு
விசம் எனும் நட்பினை ஒதுக்கு - புது
விடியலாய் சுடஉந்திட உன்னையே செதுக்கு.

எம் .ஐ . அச்சிமுகம்மட் (ஆசிரியர் )
மு /சது/ தாறுஸ்ஸலாம் ம .வி
சம்மாந்துறை



## உனக்கும் முதுமையுண்டு... மறவாதே கண்மணியே...



கிழக்கு மகாண கலை கலாச்சார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் 2016 ம் ஆண்டு நடைபெற்ற கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தருக்கான புதுக் கவிதை போட்டியில் மூன்றாமிடம் பெற்ற எனதுகவிதை

தாயன்பு முன்னாலே தரணியும் ஈடில்லை
சேயன்பு பெறவேண்டியும் ஏங்குதம்மா தாயுள்ளம்
பார் போற்ற வாழ்ந்தாலும் ஊர் தேற்ற இருந்தாலும்
பெற்றெடுத்த பிள்ளைமனம் கருணைகொள்ள
ஏங்குதம்மா தாயுள்ளம்.
முகம்பார்க்கும் முன்பே சேயை நேசித்தவள் நானம்மா
எட்டியுதைத்தாலும் சேயை கட்டியணைத்தவளும்
நானம்மா.

அலை அலையாய் அலம்பல் பேச்சு!
ஆயிரம் அழுகைப் புலம்பல் மூச்சு - என்று
தொலைதூரம் என்னை தொலைக்க எண்ணாதே மகனே!
உந்தன் துள்ளிப் படர் பருவத்தில் - நீ கேட்ட
அம்புலிமாமாக் கதையை அலுக்காமல் சலிக்காமல்
ஆயிரம் ஆயிரம் தடைவை நான் அழகாகச் சொன்னேனே!

நித்தம் நித்தம் உன் தரையை
சுத்தமின்றி வைக்கிறேனே என
சத்தம் ஒன்றும் செய்யாதே – மகனே நீ!
குளித்து வரும் என்னை – பலதடவை
மீண்டும் மீண்டும் அழுக்காக்கியும்
முத்தம் மட்டுமே உனக்கு முகமலர்ந்து தந்தேனே.

வகை வகையாய் மருந்துணவு கேட்டு
வழியெல்லாம் அலைய வைக்கிறேனென்று
பகை பகை கொண்டென்னை – நீ!
பரிதவிக்க விடாதே மகனே
கடையுணவு உந்தன் உடல்நலக் கேடென்று – அன்று என்
உதிரத்தை பாலாக்கி உணவாக ஊட்டினேனே!

இன்று வேகமாய் நட நட என்று
விரட்டி விரட்டி விடுகிறாயே என்னை
அன்று விரல் பிடித்து நடந்த நேரம்
விழாமல் மண்ணில் நீ இருக்க
அன்னமும் தோற்கும் நடை
அமைதியாய் நான் நடந்தேனடா!

நினைவிழக்கும் வயது தனில்
நித்தமும் ஒரே சொல்லை சொல்கிறேனென்று
மரணிக்கும் வார்த்தைதனில் வஞ்சகம் தீர்க்காதடா.
விழலுக்கு இறைத்த நீர்போல்
விடாமல் நீ மழலைமொழி பேசியும்
கனியமுதத் தேன்போல் அதனை காதிலே வாங்கினேனே..

கருமுகமும் இறுகிய கன்னமும்
குழி விழுந்த கண்ணும் நலிவுற்ற உடலுமுள்ள
என்னருகில் நீ வருவதற்கும் இன்சொல் பேசவும்
குமட்டல் குமட்டலாய் வருதென்று ஒதுங்கிறாயே -அது நீ
பால்வென்நீறு முகமும் பழம்போலுடம்பும்பெற
வெயில்ப்பால் குடித்து வந்த விணையென்று அறியாயோ

மருந்து வாங்குவதற்கும் மானங் காப்பதற்கும்
மாதமொருதடவை மன்றாடிப் பணங்கேட்டால்
துரத்தே தள்ளி என்னை துரத்து விடுகிறாயே – நீ
விருந்து பல உண்ணவும் வித வித அலங்கரிப்புக்கும்
பரிந்துரைத்து தந்தையிடம் பணங்கள் பல தந்ததை
கணப்பொழுதில் மறந்து கல்மனங் கொண்டாயோ!

பெற்றமனம் பித்து பிள்ளைமனம் கல்லென்பர்!
உச்சிவெயில் சுடலையில் நான் துச்சமாக வீசப்படினும்
மிச்சமுள்ள என்னுயிரும் உன் முகம்பார்க்கவே ஏங்கும்
த்தனை சொந்தங்கள் எள்ளும் தண்ணியுமிறைத்தாலும்
உன் கைப்பிடி நீர் பட்டே என்னுயிர் இறைசேரும்
உன்மடிதான் எனக்கு உயிர் நீக்கும் கல்லறையாகும்.

காவோலை நான்விழ குருத்தோலை நீ சிரிக்கிறாய்!
இப்போ துள்ளிப்படர் பருவம் உனக்காதலால்
அல்லல் விளைக்கும் பல கைங்கரியங்கள் ஆற்றி
மண்ணில் நீ மாமன்னாகத் திரிகிறாய்
நாளையுந்தன் நடைப்பயணம் முடிந்திடும் வேளையில்
உனக்கும் முதுமையுண்டு மறவாதே கண்மணியே!

ஆக்கம் - அ. சுதர்சன்
உளவள உதவியாளர்
பிரதேச செயலகம்
சம்மாந்துறை

உங்கள் சொந்தக் கவிதைகளை எழுதி அனுப்புங்கள், களம் தரக் காத்திருக்கிறது திறனொளி

## புரியாத புதிர்

புன்னகைத்து புன்னகைத்து
புற முதுகில் குத்தி
சுட்டெரிக்கும் சூரியனை போல்
சுட்டு விரலால் சுண்ணாம்பு தடவி
கண் பொத்தி பிறப்பதற்குள்
கண்ணுக்குள் கைவிட்டு
கண்ணெறிந்து கண்ணீர் வருவதை
கண்ணெடுத்தும் பார்க்காமல்
கல கலவென சிரித்து
கலிப்பூட்டுகிறார்களே
இவர்கள் தான்
புரியாத புதிர்களா?

எம்.ஐ.றமீஸா
சம்மாந்துறை-03

## புதிய நிருவாக சபை தெரிவு

சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபையின் 2017 - 2019ம் மூன்றாண்டு காலத்துக்கான புதிய நம்பிக் கையாளர் சபைத் தெரிவு கடந்த 13.11.2016ம் திகதி பெரிய பள்ளிவாசலில் மஜ்லிஸ் அஷ்ஷூறா அமீர் அஷ்ஷேக் எம்.ஐ.அமீர் (நளீமி) தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக முஸ்லிம் சமய பண்பா ட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அஷ்ஷேக் எம்.எச்.எம்.ஸமீல் (நளீமி) அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். இதன்போது அன்றைய தினம் நிருவாக உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். பிரதம நம்பிக்கையாளராக அல்-ஹாஜ் கே.எம்.முஸ்தபா (ஓ.பெ.அதிபர்), செயலாளராக அல்-ஹாஜ் எம்.எம்.ஸலீம் ஜே.பி (ஓ.பெ. நிருவாக கிராம உத்தியோகத்தர்), பொருளாளராக அல்-ஹாஜ் ஏ.எம்.றஸீட் (கணக்காளர்), உப செயலாளராக அல்-ஹாஜ் ஏ.ஆர். முஹம்மது அன்வர் (தாதிய உத்தியோகத்தர்), நிருவாக உறுப்பினர்களாக அஷ்ஷேக், அல்-ஹாஜ் எம்.வை.அஹமது ஜலீல் ஜே.பி (ஆசிரியர்), அஷ்ஷேக், அல்-ஹாஜ் கே.எம்.கே.ஏ.றம்ஸீன் காரியப்பர் (அதிபர்), அஷ்ஷேக், அல்-ஹாஜ் யூ.எல்.மஹ்றூப் ஜே.பி (ஆசிரியர்), அஷ்ஷேக் ஏ.எல்.முஹம்மது சறூக் (வர்த்தகர்), அஷ்ஷேக், அல்-ஹாஜ் ஏ.எல்.அப்துர் ரஹ்மான், அஷ்ஷேக், அல்-ஹா பிழ், அல்-ஹாஜ் யூ.எல்.எம்.சலாஹுதீன் (ஆசிரியர்), அல்-ஹாஜ் எஸ்.எல்.உசனார் ஜே.பி (ஓ.பெ.பிரதி அதிபர்), அல்-ஹாஜ் ஏ.பி. சுலைமாலெவ்வை ஜே.பி (ஓ.பெ.கிராம உத்தியோகத்தர்), அல்-ஹாஜ் எஸ்.சுலைமாலெவ்வை (வர்த்தகர்), அல்-ஹாஜ் ஐ.எல். முஹம்மதுபரீட் (கிராம உத்தியோகத்தர்), அல்-ஹாஜ் எம்.எல்.முஹம்மது ஹனீபா ஜே.பி (வர்த்தகர்), அல்-ஹாஜ் ஐ.எல்.றஷீட் (ஆசிரியர்), அல்-ஹாஜ் ஏ.சுலைமாலெவ்வை (வர்த்தகர்), அல்-ஹாஜ் அப்துல் வஹாப் (பொறியியல் உதவியாளர்), அல்-ஹாஜ் எம்.எச்.முஹம்மது ஹாரிஸ் (வர்த்தகர்), ஜனாப் யூ.எல்.அப்துல் காதர் ஆகியோர் அவையோர் முன்னிலையில் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

(நௌஷாத் ஏ கரீம்)

## சம்மாந்துறை ஜம்மிய்யதுல் குர்ஆனில் ஹுக்கீம் பொதுக்கூட்டம்


2016 ம் ஆண்டின் இறுதி பொதுக்கூட்டம் சென்ற 2016.:.12.:.24 ம் திகதி பணிப்பாளர் அல்ஹாபிழ் யு.டு அப்துல் றஷீட் அவர்களின் இல்லத்தில் தலைவர் ஆ.யு றாபிள் மௌலவி அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இதில் சம்மாந்துறையிலுள்ள அனைத்து குர்ஆன் மத்ரஸா அதிபர்களும் கலந்து கொ- ாண்டனர். இக்கூட்டத்தில் மிக முக்கியமான பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. எமது ஜம்யாவின் 2017 ம் ஆண்டில் மேற்கொன்டு செயற்படுத்தப்படும் சேவைகள் பின்வருமாறு.

2017 ம் ஆண்டில் செயற்படுத்தப்படும் சேவைகள்

1. எமது ஜம்இய்யாவில் இணைந்து செயற்படுத்திக் கொண்டிருக்கும் அனைத்து மதரஸாக்களுக்கும் எமது ஜம்இய்யாவால் பதிவுச்சான்றுதல் வழங்கல். அவ்வாறு இனைந்து செயலாற்றும் குர்ஆன் மதரஸா அதிபர்கள், ஆசிரியர்களுக் கான ஐனநவெல ஊயசன வழங்கப்படும்.
2. ஒவ்வொரு மாதமும் மாதாந்த கூட்ட அழைப்பிதழ் மதரஜா அதிபர்களுக்கு அனுப் பப்படும். அக்கூட்டமானது ஒவ்வொரு மாதமும் இரண்டாவது வாரத்தில் வரு கின்ற சனிக்கிழமை காலை 09.30 மணியள வில் பணிப்பானர் மௌலவி யு.டு அப்துல் ரஷீட் ஹாபில் இல்லத்தில் நடைபெறும்.
3. அன்றைய தினம் அனைத்து மதரஸா அதிபர்களும் சமூகமளித்தல் வேண்டும்.
4. இவ்வருடம் ஜனவரி மாதம் மாதா ந்த சந்தாப்பணம் 300 ரூபா ஐ 150 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.
5. இச்சந்தாவை தாங்கள் ஒவ்வொரு மாதமும் வழங்குவதால் பின்னால் வருகின்ற சிரமங்களை தவிர்க்க முடியும்.
6. ஒவ்வொரு மாதமும் செயலாளரினால் கூட்ட அறிக்கை மற்றும் பொருளாளரினால் கணக்கறிக்கை வாசிக்கப்படும்.
7. ஒவ்வொரு மதரஸாக்களுக்கும் அல்குர்ஆன் வழங்கும் நிகழ்வு, இப்தார் நிகழ்வு, நன்கொ டைகள் வழங்கல் போன்றவைகளை செயற்படுத்த திட்டமிட்டுள்ளது.
8. மாணவர் வரவுப்பதிவேடு இலவசமாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.
9. அல்குர்ஆன் பொதுப்பரீட்சை வழமை போன்று நடாத்தப்படும். அதற்கான திகதி பிற்பாடு அறிவிக்கப்படும்.
10. பொதுப்பரீட்சை நடாத்தமுன் மாணவர்களுக்கான கருத்தரங்குகள் நடாத்தப்படும்.
11. வருடத்தில் இரு தடவைகள் அதிபர் ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள் நடாத்தப்படும்.
12. அரசாங்கத்தினால் (முஸ்லிம் சமய கலாச்சார பண்பாட்டலுவல்கள் திணைக்களத் தினால்) நடாத்தப்படும் அல்குத்ஆன் மதரஸா மாணவர்களுக்கான பொது பரீட்சையில் எமது ஜம்யாவின் மாணவர்கன் இனைந்து விண்ணப்பித்து பரீட்சை எழுத ஏற்பாடுகள் செய்யப்படும்.

(தொடர் பக்கம்)

## மர்ஹூம் எம்.ஏ.அப்துல் மஜீத் நினைவு அரங்கு



ஆளுமையின் அடையாளம் அப்துல் மஜீட் நினைவு அரங்கு 2016.12.13ஆம் திகதி சம்மாந்துறை கலாசார நிலையத்தில் வெகுசிறப்பாக இடம் பெற்றது. அப்துல் மஜீத் பவுன்டேசன் அமைப்பின் பணிப்பாளரும் பத்திரிகையாளருமான அபூநஜாத் பௌஸ்தீன் அவர்களது நெறிப்படுத்தலில் இடம் பெற்ற நினைவு அரங்கின் ஆரம்பமாக நிறைவேற்று பணிப்பாளரும் எழுத்தாளருமான கனம் என். மஹ்றூப் அவர்களது வரவேற்புரை இடம்பெற்றது. கௌரவ பிரதம அதிதியாக பாராளுமன்றப் பிரதிநிதி எம்.ஐ.எம். மன்சூர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. கௌரவ சிறப்பு அதிதிகளாக அம்பாறை மாவட்ட மேலதிக செயலாளர் அஸ்ஸெய்க் எம்.ஐ. அமீர் , சம்மாந்துறை பிரதேச செய லாளர் கனம் ஏ. மன்சூர் , முன்னால் பாராளுமன்ற பிரதிநிதி கனம் எஸ்.பி. மஜீத் ஆகியோரும் கௌரவ அதிதிகளாக சம்மாந்துறை பிரதேச சபையின் செயலாளர் கனம் ஏ.சலீம் , நம்பிக் கையாளர் சபைத்தலைவர் ஜனாப் கே. எம். முஸ்தபா, ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். இந்த அரங்கில் ஓய்வு பெற்ற அதிபரும் மூத்த கவிஞருமான கலாபூஷனம் மாறன் யு. ஸெயின் அவர்களது தலைமையில் அப்துல் மஜீத் நினைவுக் கவி அரங்கு வெகு சிறப்பாக இடம் பெற்றது. இக்கவி அரங்கில் கலாபூஷனம் ஏ.ஸி. இஸ்மாலெப்பை, கலாபூஷனம் பாலமுனை பாறூக், கலாபூஷனம் பரிதா இஸ்மாயில் , கவிஞர் இஸ்மா பரிது , கவிஞர் எம். ஐ. எம். றனூஸ், கவிஞர் அச்சிமுஹம்மட் , கவிஞர் அலியார் , கவிஞர் நஸீஹா இப்றாஹீம் , கவிஞர் பாத்திமா ஜுனைதீன் பல கவிஞர் - கவிஞினிகள் அப்துல் மஜீத் தொடர்பான தத் தம் கவிதைகளை மழையாகப் பொழிந்து பலரதும் பாராட்டுக்களைப் பெற்று இருந்தனர். இறுதியாக அப்துல் மஜீத் பவுன்டேஷன் தேசிய அமைப்பாளர் கவிஞர் ஏ. நௌபர் அலி அவர்களின் நன்றியுரை இடம் பெற்றது.

# தீனுல் இஸ்லாம்

தயாரிப்பு – மௌலவி எம்.ஐ.எம்.கலீல் (தப்லீகி)

## நபியவர்களின் பிறப்பு

யானை ஆண்டிற்கு ஓர் ஆண்டிற்கு முன்னரே நபியவர்களின் பெற்றோரான அப்துல்லா ஆமினா ஆகியோரின் திருமணம் நடைபெற்றது. நபியவர்கள் பிறப்ப தற்கு 2 மாதங்களுக்கு முன் அப்துல்லாஹ் யத்ரிபில் மரணமடைந்தார். அவர் மரண மடையும் போது 5 ஒட்டகைகள், சில ஆடுகள், "உம்மு அய்மன்" என்ற அபீஸீனிய அடிமைப் பெண் ஆகியவற்றையே அனந்தரமாக விட்டுச் சென்றார். முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் யானை ஆண்டு (ஆமுல் ஃபீல்) றபீஉல் அவ்வல் மாதம் பிறை 12 திங்கட்கிழமை அதிகாலை மக்கா நகரில் பிறந்தார்கள். இது கி.பி. 571 ஏப்ரல் 22ம் திகதி எனக் கணிக்கப்படுகின்றது. நபியவர்களின் தந்தை பெயர் அப்துல்லாஹ், தாயார் பெயர் ஆமினா, இவர்கள் இருவரும் ஒரே பரம்பரையைச் சேர்ந்தவர்களாவர்.

## இர்ஹாஸாத்

நபி அவர்கள் பிறப்பதற்கு முன்னரும் பிறக்கும் போதும் பல அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன. நபிமார்களுக்கு நபித்துவம் வழங்கப்பட முன்னர் நடைபெறும் அற்புதங்கள் ' இர்ஹாஸாத்' என்று அரபு மொழியில் குறிப்பிடப்படுகின்றது. அதன்படி நபி அவர்களுக்குக் காணப்பட்ட 'இர்ஹாஸாத்' கள் பின்வருமாறு

1. ஆப்ரகாவின் யானைப்படை அபாபியில் சிரிய பறவைகளால் முறியடிக்கப்பட்டமை. (அல்குர் ஆன் 105: 01-05)
2. வானத்தை நெருங்கும் ஜின்கள் வின்கற்களால் தாக்கப்பட்டமை(அல்குர் ஆன் 72: 08-09)
3. நபி அவர்கள் பிறக்கும் போது அவர்களுடன் பிரகாசமான ஒளி வெளிவந்தமை (முஸ்னத் அஹ்மத்)
4. அவர்கள் பிறந்த வேளை பாரசீக மன்னனின் அரண்மனையில் 14 அறைகள் இடிந்து விழுந்தமை (தலாயிலுன்னுபுவ்வா)
5. ஈரானின் வடக்கே அமைந்துள்ள சாவா நகரத்தில் இருந்த கோயில்கள் இடிந்தமை (தலாயிலுன்னுபுவ்வா)
6. "ஸாவா" வில் இருந்த வற்றாத வாவி வற்றியமை (தலாயிலுன்னுபுவ்வா)
7. நபியவர்களுக்கு பால்கொடுக்கத் தொடங்கிய அலீமா அவர்களின் மார்பில் பால் சுரந்தமை (சீறா இப்னு ஹிஷாம்)

## குழந்தைப் பருவம்

நபியவர்கள் பிறந்தது முதல் சில நாட்கள் அவர்களின் தாயாரே அவர்களுக்கு பாலூட்டி வந்தார்கள். பின்னர் கிராமத்துப் பெண்ணான ஹலீமதுஸ் ஸஃதியா அவர்கள் பாலூட்டி வளர்த்தார்கள். கிராமப்புறங்களில் தூய மொழி பேசப்படுவதாலும், தொற்று நோய்கள் குறைவானமையாலும், தூய காற்றுப் போன்ற இயற்கையான சுகாதார வசதிகள் இருந்தமையாலும் திடகாத்திரமான உடற்கட்டு ஏற்பட வாய்ப்புண்டாகையாலும் குழந்தைகளை கிராமப் புற பெண்களிடம் வளர்ப்பதற்காக கொடுப்பது அக்கால வழக்கமாகும். இதன்படியே நபியவர்களும் ஹலீமா அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். நபியவர்களை ஹலீமா அவர்கள் கையேற்க்க முன்னரே அபூலஹபின் அடிமைப் பெண்ணான துவைபதுல் அஸ்லமியாவும் அவர்களுக்குப் பாலூட்டினார்கள். நபியவர்கள் பெற்றோரின் ஏக புதல்வராகையால் அவர்களுக்கு உடன் பிறந்த சகோதரர்கள் இல்லை. ஆயினும் ஹலீமா, துவைபா ஆகிய இருவர் மூலமும் பால்குடிச் சகோதரர்கள் இருந்தனர். நபியவர்களை வளர்க்கக் கொண்டு வந்ததிலிருந்து ஹலீமா அவர்களின் வறுமை குறைந்து வாழ்வு செழிப்புற்றது. ஆதலால் அவர்கள் தனது சொந்த மக்களை விடவும் நபியவர்கள் மீது அதிக அன்பு செலுத்தினார்கள். குழந்தைக்கு இரண்டு வயதான போது அதனை தாயாரிடம் சேர்ப்பதற்காக ஹலீமா அவர்கள் மக்காவிற்கு கொண்டு வந்தார்கள். தமது உள்ளத்தில் உயரிய இடத்தை பிடித்துக் கொண்ட அக்குழந்தையை பிரிவது ஹலீமா அவர்களுக்கு சொல்லொணாத் துயரத்தை ஏற்படுத்தினாலும் குழந்தையை தாயாரிடம் ஒப்படைக்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கிருந்தது. தனது சின்னஞ்சிறு குழந்தையைக் கண்டதனால் ஆமினா அவர்கள் மட்டில்லா மகிழ்ச்சியடைந்தார்கள் எனினும் மக்காவில் அப்போது தொற்று நோய் பரவியிருந்தமையால் குழந்தையை மீண்டும் கிராமத்துக்கே அனுப்பவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதனால் ஹலீமா அவர்கள் ஆனந்த வெள்ளத்தில் மிதந்தார்கள். நபியவர்கள் தமது நான்காம் வயதில் ஒரு முறை சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது அவர்களிடம் ஜிப்ரீல் (அலை) அவர்கள் வருகை தந்து,அவர்களை நிலத்தில் அன்னாந்து படுக்கவைத்து அவர்களது மார்பை பிளந்து இதயத்தை எடுத்து அதிலிருந்த "அலகா" எனும் சதைத் துன்டை அகற்றிவிட்டு ("இது ஷைத்தானின் பகுதி" என அதனை சுட்டிக் காட்டினார்கள்) தொடர்ந்து இதயத்தை தங்க தாம்பாளத்தில் வைத்து "ஸம் ஸம்" நீரினால் கழுவிய பின்னர் அதனை மார்பில் பொருத்தி பழைய நிலையிலேயே வைத்தார்கள். அவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள், வளர்ப்புத தாயாரிடம் ஓடி வந்து நபியவத்கள் கொலை செய்யப்பட்டு விட்டதாக கூறினார்கள். அவர்கள் எல்லோரும் அங்கு வந்து பார்த்த போது நபியவர்களின் நிறம் பேதலித்த நிலையில் இருந்தார்கள். இந் நிகழ்ச்சியை இமாம் முஸ்லிம் பதிவு செய்துள்ளார்கள்.

09ஆம் பக்கத் தொடர்

13. இப்பரீட்சை சம்மந்தமாக மாணவர்களுக்கு முன்னோடி பரீட்சை மற்றும் கல்விக்கருத்தரங்குகள் நடாத்த ஏற்பாடு செய்யப்படும்.
14. ஒவ்வொரு மத்ரஸாவில் கல்வி கற்கும் 4ம் 5ம் 6ம் ஆண்டு மாணவர்களுக்கு எழுத்துப் பரீட்சை நடாத்தப்படவுள்ளது.
15. பெற்றோர் ஒன்று கூடல்கள் தங்கள் மத்ஸாவில் நடைபெற வேண்டும். இக்கூட்டங்களுக்கு எமது ஜம்மிய்யாவின் தலைவர், செயலாளர் நிர்வாகிகளை அழைத்து தீர்வினை காண முடியும். மத்ரஸா அதிபர் ஆசிரியர்கள் தங்கள் மத்ரஸாக்களில் மாணவர்களின் பிரச்சினைகள் அல்லது பெற்றோர்களின் பிரச்சினைகள் காணப்படின் கடிதம் மூலமாக எமது ஜம்மிய்யாவிற்கு எழுதி அனுப்பி தீர்வினை பெற வேண்டும்.
16. நோன்பு விடுமுறை, நோன்பு பெருநாள் விடுமுறை, ஹஜ் பெருநாள் விடுமுறை, முஹர்ரம் விடுமுறை, றபீஉல் அவ்வல் விடுமுறை போன்ற விடுமுறைகள் ஒரே தினத்தில் அனைத்து குர்ஆன் மத்ரஸாக்களுக்கும் வழங்கப்படும். அத்தினங்கள் உரிய காலங்கள் வருவதற்கு ஒரு வாரத்திற்கு முதல் அறிவிக்கப்படும்.
17. மேற்படி செயல்படுத்தப்படும் செயற்பாடுகளுக்கு அதிபர் ஆசிரியர்களாகிய தாங்கள் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

(தகவல்: பி.எம்.பர்ஹானுத்தீன்)



# குர்ஆன் மத்ரஸா அறிமுகம்

தயாரிப்பு:- அல் - ஹாபிழ் PM.பர்ஹானுத்தீன்
[செயலாளர், ஜம்மிய்யதுல் குர்ஆனில் ஹக்கீம்]





## அல் - மத்ரஸதுல் இர்ஷாதிய்யா





சம்மாந்துறை ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள நஹர் பள்ளி வாசலின் மேல் மாடியில் அல் - மத்ரஸதுல் இர்ஷாதிய்யா என்ற பெயரில் பல வருடங்களாக ஒரு குர்ஆன் மத்ரஸா இயங்கி வருகின்றது இந்த மத்ரஸாவை 1993 தொடக்கம் 1995 வரை ஜனாப் S. முஹம்மட் அலி (லெவ்வை) அவர்களும் 3வருடங்கள் 1995 முதல் 1998 வரை அல்-ஹாஜ் மௌலவி அகமட் ஜலீல்(Tr) 3வருடமும் நடாத்தியதை 1998 இலிருந்து இன்று 2016 வரை 18வருடங்களாக அல்-ஹாஜ் மௌலவி M.A.M ஜாபிர் அவர்கள் நடாத்தி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 1998 இல் மௌலவி M.A.M ஜாபிர் பொறுப்பெடுக்கும் போது 6 பிள்ளைகள் மட்டும் மீதமாக இருந்தது மற்ற பிள்ளைகள் ஏற்கனவே நடாத்திய ஆசிரியரின் இடத்திற்கு சென்றுவிட்டார்கள். சுமார் 6 வருடங்களாக 30ற்கும் 40ற்கும் இடையிலுள்ள பிள்ளைகள் மட்டுமே ஓதிக்கொண்டிருந்தார்கள். அல்லாஹ்வின் உதவியால் இன்று 70 பிள்ளைகள் ஓதிக்கொண்டிருக்கிறார்கள். இரண்டு ஆசிரியர்களுடன். இந்த மத்ரஸாவில் தஜ்வீத், தீனிய்யத், தர்பிய்யா (துஆ, ஹதீஸ், சிறிய சூறா மனனம் மற்றும் தொழுகை வுழு சம்மந்தப்பட்ட முறைகளும் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன.) இதுவரைக்கும் 200ற்கும் மேற்பட்ட பிள்ளைகள் ஓதி முடித்துள்ளார்கள். இந்த மத்ரஸாவில் ஓதி முடித்த பிள்ளைகளை முஹர்ரம், ரபீஉல் அவ்வல் மாதம் விழா வைத்து சான்றிதல் வழங்கப்படுவது வழக்கமாக உள்ளது. ஒவ்வொரு வருடமும் பிள்ளைகளை உற்சாகப்படுத்த அறையில் ஆடினால்தான் அம்பலத்தில் ஆடலாம் என்பதற்கு அமைய நிகழ்ச்சிகள் வைத்து பயிற்றுவிக்கப்பட்டு மேடையிலும் பேசுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இம் மத்ரஸாவில் இரண்டாம் ஆண்டு படிக்கும் அதிக பிள்ளைகள் குர்ஆனை பார்த்து சரளமாக ஓதும் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வருடமும் சம்மாந்துறை ஜம்மியதுல் குர்ஆன் அமைப்பால் நடாத்தப்படும் பரீட்சையில் ஒவ்வொரு வருடமும் பங்குபற்றி வெற்றியுடன் பல பிள்ளைகள் திரும்பியிருக்கின்றார்கள் என்பது சந்தோசப்பட வேண்டிய விடயமாகும். பாடசாலை கல்விதான் நம்மை பாதுகாக்கும் தலை நிமிர்ந்து. வாழச் செய்யும் எனவே நல்லா படிப்போம் என்று இருக்கும் இந்த காலகட்டத்தில் குர்ஆன் மார்க்கவிடயங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது என்றால் அந்த வகையில் சகல மத்ரஸாவையும் பாராட்ட வேண்டியுள்ளது இம்மத்ரஸாவை மேல்பார்வை செய்யும் நிர்வாகம் பின்வருமாறு

1) தலைவர் அல்ஹாஜ் M.A அபுஸாலி
2) செயலாளர் ஜனாப் M.A றசூல்
3) பொருலாளர் அல்ஹாஜ் M.I அப்துல் ஹகீம்
4) உபதலைவர் அல்ஹாஜ் M.T அப்துல் ஹனீட்
5) உபசெயலாளர் அல்ஹாஜ் A.A அனீஸ்
6) கனக்காளர் ஜனாப் M.T.M ஜனூபர்
7) நிர்வாக உறுப்பினர் அல்ஹாஜ் S.M.M முஸ்த்தபா
8) நிர்வாக உறுப்பினர் ஜனாப் A.L அப்துல் றஸீட்
9) நிர்வாக உறுப்பினர் அல்ஹாஜ் U.L அப்துல் மஜீட்
10) நிர்வாக உறுப்பினர் அல்ஹாஜ் M.J.M றாஸீக்
11) நிர்வாக உறுப்பினர் அல்ஹாஜ் M.L.H.M சித்தீக்
12) நிர்வாக உறுப்பினர் அல்ஹாஜ் S மீராலெவ்வை
13) நிர்வாக உறுப்பினர் ஜனாப் M.R பௌசான் அகமட்
14) நிர்வாக உறுப்பினர் அல்ஹாஜ் A.L அலியார்
15) நிர்வாக உறுப்பினர் அல்ஹாஜ் M.Y.M கலீல் (ஹாபிழ்)

## வீட்டிற்குள் நுழையும் முன் ஓதும் துஆ

بِسْمِ اللهِ وَلَجْنَا وَبِسْمِ اللهِ خَرَجْنَا وَعَلَى اللهِ رَبِّنَا تَوَكَّلْنَا

அல்லாஹ்வின் பெயரால் நுழைந்தோம், அல்லாஹ்வின் பெயராலேயே வெளியில் புறப்படுவும் செய்தோம், எங்கள் இறைவனாகிய அல்லாஹ்வையே நாங்கள் முழுமையாகச் சார்ந்து இருக்கிறோம்.

## புதிய மாணவர்கள் அனுமதி

ஸலாஹிய்யா அரபுக் கல்லூரி

பிபிலை, கொடிகமுவையில் அமைந்துள்ள மேற்படி அரபுக் கல்லூரிக்கு ஷரீஆ கிதாபு பிரிவு மற்றும் ஹிப்ழ் பிரிவுக்கு புதிய மாணவர்களை சேர்த்துக்கொள்ள விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்

The Principal
Salahiyya Arabic College
Godigamuwa, Kotabowa, Medagama
0555611689,0753428348,0768365660,0729874456




# பாலர் பாடசாலை அறிமுகம்

தயாரிப்பு:- எஸ்.எம்.றிஸான் (PSEB)




## அல்-மீஸான் இஸ்லாமிய ஆங்கில பாலர் பாடசாலை

சம்மாந்துறை பிரதேச செயலகத்திற்கு உட்பட்டதும், சம்மாந்துறை வலயக் கல்விப் பிரிவிற்குட்பட்டதுமான 187, புளக் "ஜே" கிழக்கு ஹிஜ்ரா 2ம் வீதியில் அமைந்துள்ள அல் மீஸான் இஸ்லாமிய ஆங்கிலப்பாலர் பாடசாலை டிப்ளோமா பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த, அனுபவம் வாய்ந்த இரண்டு ஆசிரியர்களைக் கொண்டு 35 பிள்ளைகளுடன் நான்கு வருட காலமாக இயங்கிக் கொண்டிருக்கும் எமது பாடசாலை ஐந்தாவது புதிய கல்வியாண்டில் கால்பதிக் கவிருக்கும் எமது பாடசாலையில் பாலர் பாடசாலை பாடத்திட்டங்களுடனான கல்வியும், இஸ்லாமிய விழுமியங்களுடனான கல்வியும், சிறார்களுக்கான இலகு ஆங்கிலக் கல்வியும் கற்பிப்பதற்காக அதிபர் AM. நௌபியா மௌலவியா AM. நஸ்லியா A. அஸ்மியா ஆகிய மூன்று ஆசிரியர்களைக் கொண்டு திறன் பட செய்வதோடு எம்மிடமிருந்து செல்லும் சிறார்கள் சமூகத்தில் சமூக சேவகர்களாகவும், இஸ்லாமிய ஒழுக்கமுள்ள புத்திஜீவிகளாகவும், கல்விமான்களாகவும், நற்பிரஜையாக நறுமணம் பரப்பும் உதிரப்பூக்களாக திகழ வேண்டும் என்ற சேவை மனப்பாங்குடன் சேவையாற்றும் பாலர் பாடசாலையாக எங்கள் அல்- மீஸான் பாலர் பாடசாலை திகழ்கின்றது.

## சிந்தனைக்கு

1– தன்னை அறிந்தவன் ஆசைப்படமாட்டான் உலகை அறிந்தவன் கோபப்படமாட்டான் இந்த இரண்டையும் அறிந்தவன் கஸ்டப்படமாட்டான்.

2– பிறருடைய கருத்துக்களை காது கொடுத்து கேட்கும் பக்குவம் எவரிடம் உள்ளதோ அவரின் கருத்துக்களே இறுதியில் மேலோங்கி நிற்கும்.

3– நீ எங்கு சென்றாலும் நல்லவற்றையே செய் அப்போது நீ செய்த நன்மைகள் உன்னையே வந்து சேரும்.


4– தேவை முடிந்தால் விலகும் நண்பர்கள் பணம் இருந்தால் பாசம் காட்டும் பந்தங்கள் இவர்களுடன் இருப்பதை விட நான் அநாதையாக வாழ்வது மேல்.

**தொகுப்பு: அல்–ஹாஜ் எஸ்.அபூபக்கர் (ஜே.பி)**
ஓய்வு பெற்ற அதிபர்




சம்மாந்துறை அல்-மத்ரஸ துன் நூறாணிய்யாவின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படங்கள்
(படங்கள்: நஸ்றுல்லாஹ்)


# AFRITH MOBILE
# அப்றித் மொபைல்



HUAWEI

அனைத்து கம்பனிகளினதும் கையடக்கத் தொலைபேசிகளை குறைந்த விலையில் பெறுவதோடு கையடக்கத் தொலைபேசிகளை திருத்திப் பெறவும், சகல சிம் காட் உட்பட ரீலோட் வசதிகளைப் பெறவும் SOFTWARE தேவைகளுக்கும் நாடுங்கள்



AFRITH MOBILE
162, Police Road
Sammanthurai
TP: 0758145201, 0769117908

# நூல் அறிமுகம்

தயாரிப்பு: நௌஷாத் ஏ கரீம்

## காமரிமுதல் கிராமநிலதாரிவரை (வரலாற்றுஆய்வு நூல்)





சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபைச் செயலாளரும், ஓய்வு பெற்ற நிருவாக கிராம உத்தியோகத்தருமான அல்ஹாஜ் எம்.எம்.ஸலீம் அவர்களால் தொகுத்தெழுதப்பட்ட "காமரிமுதல் கிராமநிலதாரிவரை" என்னும் பெயரிலான ஆய்வு நூல் பற்றிய அறிமுகத்தினை திறனொளி சஞ்சிகை மூலம் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விளைகிறேன். இவ் ஆய்வு நூல் சம்மாந்துறை பிரதேச கிராம உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தால் 2014ஆம் ஆண்டில் அப்துல் மஜீட் மண்டபத்தில் மிகக் கோலாகலமாக வெளியிட்டு வைக்கப்பட்டதை நாம் அறிவோம். நூலாசிரியர் பல மாதங்களாக கிழக்கு மாகாணத்தின் பல பிரதேசங்களுக்கும் சென்று பல சிரமங்களின் மத்தியில் இந் நூலை ஆய்வு செய்து தொகுத்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. பிரதேச கட்டமைப்பில் மன்னர் ஆட்சிக்காலம் தொடக்கம் இன்றுவரையும் கூட கிராம உத்தியோகத்தர்களின் தனித்துவமும், மகத்துவமும் அளப்பெரியன. அவர்கள் அவ்வப்பிரதேசங்களின் முதன்மை அரச பிரதிநிதியாக மதிக்கப்பட்டார்கள். பிற்பட்ட காலங்களில் நிருவாக அதிகாரங்கள் வேறுவிதமாக அமைந்தாலும் கூட கிராம உத்தியோகத்தர்களின் பங்கு முதன்மை இடத்திலேயே இருந்துவருகின்றது. பிரதேச மட்டங்களில் அப்பிரதேசம் பற்றி முழுமையானஅறிவினைக் கொண்டவராகவும் பிரதேச மக்களின் முதன்மைக் காப்பாளராகவும் இவர்களின் பங்களிப்பு பெறுமதி வாய்ந்தது. மேலும் மக்களோடு மக்களாக வாழ்ந்து அரச மட்டத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி இலக்குகளையும், ஏனைய சேவைகளையும் கிராம மட்டத்தில் நடைமுறைப்படுத்தும் பொறுப்புள்ளவர்களாக காணப்படுகின்றனர். இவ்வாறான பொறுப்புக்களையும் கடமைகளையும் செய்து கொண்டு வந்த, செய்து கொண்டு வருகின்ற எமது பிரதேசத்தில் வாழ்ந்த பல விதானைமார் இன்று இறையடி எய்து விட்டார்கள். அன்னார்களுக்காகப் பிரார்த்திப்பதுடன் இன்னும் சிலர் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின் எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் சிலர் இப்போதும் சேவையில் உள்ளனர். அத்தகையவர்களில் சம்மாந்துறையின் முதல் விதானை என நூலாசிரியரால் ஆய்வு செய்யப்பட்டவர் 1859இல் பிறந்த எம்.பி.மீராஉசைன் விதானையாகும். அவரை முதற் கொண்டு 95 விதானைமார்களது வாழ்க்கை வரலாறுகள், அவர்கள் பதவியாற்றிய இடங்கள் என்பன இந்நூலில் இடம் பெற்றுள்ளன. நூலாசிரியரின் 9 பக்கங்களைக் கொண்ட கட்டுரையின் மூலமாக கிராமஅலுவலர்பதவிதொடர்பானபலவிடயங்களைஅறியமுடிகிறது. பல அரசியல்வாதிகள், கல்விமான்களது வாழ்த்துரைகளுடன் வெளிவந்துள்ளஇந்நூலில்சம்மாந்துறையின்வரைபடம், பதவிப்பெயர்கள், வரலாற்றில் இடம் பெறுபவர்களின் புகைப்படங்கள் சம்மாந்துறையில் கடமையாற்றிய பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், இன்னும் பல கதைகள், கவிதைகள், வரலாற்றுத் தகவல்களையும் உள்ளடக்கிய இந்நூல் வரலாற்றுத் தேடல் கொண்ட மாணவர்கள், பொதுமக்களுக்கு மிக்க துணைபுரியும் என்பதில் ஐயமில்லை.நூலாசிரியரின் முயற்சிக்கு எமது வாழ்த்துக்கள். இந் நூலை வெளியிட்டு வைத்த கிராம உத்தியோத்தர் நலன்புரிச் சங்கத்தையும் பாராட்டுகிறோம்.

எழுத்தாளர்களே! நூல் அறிமுகம் பகுதிக்கு நீங்கள் வெளியிட்ட புத்தகத்தின் பிரதியொன்றை எமக்கு அனுப்பி வையுங்கள் நூல் அறிமுகம் பகுதியில் உங்கள் நூலும் இடம்பிடிக்கும்

நூல் அறிமுகம்
திறனொளி
112, பிர்தௌஸ் பள்ளி வீதி
சம்மாந்துறை - 03

NUHA SHOE MART
நுஹா சூ மார்ட்
ஆண் பெண் இருபாலாருக்குமான அனைத்து வித முன்னணி கம்பனிகளின் பாதணி ரகங்களை அவரவர்
விருப்பத்திற்கு ஏற்ப குறைந்த விலையில் பெற நாடவேண்டிய பாதணிக் களஞ்சியம்





NUHA SHOE MART
Amparai Road
Sammanthurai
Tell: 0773855937

## திறனொளியின் கேள்வி பதில்

தயாரிப்பு:-
மௌலவி ஐ.எல்.அப்துல் றஹீம் (தப்லீகி)

கேள்வி பதில் -02 இல் கேட்கப்பட்ட வினாவுக்கான
சரியான விடை:- கஸ்வா

### கேள்வி பதில் -02 இற்கான வெற்றியாளர்

ஐ.றிஸ்கான்
192. மல்13ம் வீதி. மலையடிக்கிராமம்-01
சம்மாந்துறை.

இவருக்கு FRS கொமியுனிகேசன் & டெக்ஸ்டைல்ஸ் நிறுவனம் சார்பாக திறனொளியின் பாராட்டுக்கள்.
பரிசினைப் பெற 0674905403 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### கேள்வி பதில் -03

**திறனொளியின் "கேள்வி பதில் -03" இற்கான கேள்வி**

நபி (ஸல்) அவர்களின் எத்தனையாம் வயதில் அல்-குர்ஆனின் முதலாவது திருவசனம் இறங்கியது?

**சரியான விடையினை எதிர்வரும் பெப்ரவரி 15ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக தபாலில் எழுதி அனுப்பி பெறுமதியான பரிசினைப் பெற்றுக்கொள்ளுங்கள்.**

**பரிசு வழங்குவோர்:-**

சமூக நலப் பணிகளை முன்னின்று செய்து வரும் சம்மாந்துறை ஸ்டார் மகளிர் அபிவிருத்தி நிறுவன தவிசாளர் எம்.றபீக் அவர்கள்

விடைகளை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி:-

கேள்வி பதில் - 03
திறனொளி
112, பிர்தௌஸ் பள்ளி வீதி
சம்மாந்துறை-03



இலஞ்சம் அல்லது ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவும், கல்வி அமைச்சும் இணைந்து நாடாளாவிய ரீதியில் நடாத்திய ஆக்கத் திறன் போட்டியில் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரிக்கு (தேசிய பாடசாலை ) தேசிய கௌரவம். கையெழுத்துப் பிரதிக்கான போட்டியில் M.I.அகமட் வெவ்வை அகில இலங்கை மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று பாடசாலை , அம்பாறை மாவட்டம் கிழக்கு மாகாணத்துக்கு பெருமை சேர்த்துள்ளார். பரிசில் வழங்கும் நிகழ்வு ஹோட்டல் தாஜ் சமுத்திராவில் அண்மையில் இடம்பெற்றது

## நமது முதுசங்கள்- ஆளுமைகள் I- அவக்கர் ஈஸா முகாந்திரம்

தொகுப்பு: கலாபூஷணம் எஸ்.எச்.எம்.முஸ்தபா ஜே.பி (மு.அதிபர்)

கண்டி அரசன் காலத்தில் அபூபக்கர் ஈஸா முகாந்திரம் என்பவர் சம்மாந்துறையில் அரசனின் முகாந்திரமாகக் கடமையாற்றினார். அரசருக்கு விசுவாசமாகவும். சம்மாந்துறையின் பாதுகாப்பு. நிர்வாகம் என்பன இவரது பொறுப்பிலேயே விடப்பட்டிருந்தன. இதுதவிர. "தாவளம்" மூலம் சம்மாந்துறை சந்தையிலிருந்து. துறைமுகத்திலிருந்து பொருட்களை கண்டி இராச்சியத்திற்கு கொண்டு செல்லும் உரிமையும் பெற்றிருந்தார். நாலைந்து மாடுகளை ஒன்றாக பிணைத்து. அதன் முதுகுகளில் பொருட்களை ஏற்றிச் செல்ல பயன்படும் வாகனத்திற்கு "தாவளம்" என அழைக்கப்பட்டதாகும். இவ்வாறு பல தாவளங்களுக்கு உரிமையானராகவும் ஈஸா முகாந்திரம் விளங்கினார். கிழக்கு மாகாணத்தை பிரித்தானியர் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்த போது. கண்டி இராச்சியத்தையும் கைப்பற்றும் நோக்குடன் படையெடுத்து வந்தனர். இதை அறிந்த ஈஸா முகாந்திரம் தனக்கு விசுவாசமான படையினருடனும் ஓந்தாச்சிமடம் என்னும் இடத்தில் தடுத்து நிறுத்தினார். இதனால் கோபமுற்ற அப்போதிருந்த பிரித்தானிய செயலாளர் றொபட் அர்பேத் றோட் எனும் அதிகாரி ஈஸா முகாந்திரம் உட்பட கிழக்கு மாகாணத்தை சேர்ந்த 07 பேரை 1604.06.06 ஆந் திகதி "தேசத்துரோகிகள்" என்று பிரகடனம் செய்தார். அன்மையில் மான்புமிகு ஜனாதிபதி அவர்கள் ஊவா வெல்லஸயைச் சேர்ந்த 19 சிங்களவர்களை பிரித்தானிய அரசு 1818இல் தேசத்துரோகிகளாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்தவர்களை "இலங்கைக்காக போராடிய வீரர்கள்" என்று பிரகடனப்படுத்தியிருந்தார். அதுபோல் ஈஸா முகாந்திரம் உட்பட கிழக்கு மாகாணத்தை சேர்ந்த ஏழு பேரையும் சுதந்திர வீரர்களாக பிரகடனம் செய்யப்பட வேண்டிய பொறுப்பை இலங்கை முஸ்லிம் தலைவர்கள் பொறுப்பேற்க வேண்டும். இன்று இனவாதத்திற்கு மத்தியில் சிக்குண்டிருக்கும் இலங்கை மக்கள். நாட்டைக்காப்பாற்றுவதற்காக முஸ்லிம்களும் போராடியுள்ள வரலாற்றை அறிந்து கொள்ளலாம்.




தேசிய கொள்கை மற்றும் பொருளாதார நடவடிக்கை அமைச்சின் மேற்பார்வை மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் , தேசிய இளைஞர் கழக சம்மேளனம் ஆகியவைகளின் ஆலோசனைக்கு அமைய சம்மாந்துறை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இலவச தலைமைத்துவ முகாம் சது/அல்- ஹிஜ்ரா வித்தியாலயத்தில் கடந்த நவம்பர் மாதம் 11ம் திகதி தொடக்கம் 13ம் திகதி வரை நடாத்தப்பட்டதோடு அதற்கான சான்றிதழ் வைபவம் அண்மையில் பிரதேச செயலகத்தில் தேசிய இளைஞர் கழக உப தலைவரும் , சம்மாந்துறை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவரும் வைத்திய மாணவருமான ஏ.ஆர்.அஸ்ஸாம் அவர்களின் தலைமையிலும் இளைஞர் சேவை அதிகாரி ஏ.ஆர்.றியாஸ் அவர்களின் ஆலோசனையிலும் பிரதேச செயலக செயலாளர் , உதவி செயளாளர் , மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி , பொலிஸ் அதிகாரி , விளையாட்டு உத்தியோகத்தர் ஆகியோரின் பங்களிப்புடன் இடம்பெற்றது.

## கலாபூஷணம் விருது



கலை வளர்ச்சிக்காக தங்களது வாழ்நாளை அர்ப்பணித்துப் பணியாற்றியமைக்காக கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நாடாளாவிய ரீதியில் கலைஞர்களை கௌரவித்து அரசினால் வழங்கப்படும் கலாபூஷண விருதுக்கு அம்பாரை மாவட்டத்திலிருந்து 14 பேர் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுள் 10 பேர் தமிழ் மொழி மூல கலைஞர்களும், 04 பேர் சிங்கள மொழி மூல கலைஞர்களும் அடங்குவர். இதில் சம்மாந்துறையைச் சேர்ந்த எம்.தம்பிராசா இம்முறை கலாபூஷணம் அரச விருதுக்காக பிரதேச கலாசார அதிகார சபையினால் தெரிவு செய்யப்பட்டார். இவருக்கான விருது வழங்கள் நிகழ்வு அண்மையில் கொழும்பு தாமரைத் தடாகத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



# வாசகர் வட்டம்



**என்.ஆதிப்f ஹிக்மத்**
431/B, நூர் பள்ளி வீதி
சம்மாந்துறை-09

விருப்பமான துறை:
பாடல், நடனம்



**ஆர்.ஆனிப் இலாஹி**
பஸார் வீதி
சம்மாந்துறை.

விருப்பமான துறை: சித்திரம்
வரைதல்

உங்கள் புகைப்படம் மற்றும் விபரங்களை அனுப்பி வாசகர் வட்டத்துடன் இணைந்து கொள்ள அனுப்ப வேண்டிய முகவரி

வாசகர் வட்டம்
திறனொளி
112, பிர்தௌஸ் பள்ளி வீதி
சம்மாந்துறை-03

## அபிமானிகள் அபிப்பிராயம்!

திறனொளியே நீ சுமந்து வரும் எமதூர் பற்றிய தகவல்கள் விடயங்கள் அனைத்தும் வரவேற்கத்தக்கதும், பாராட்டத்தக்கதுமாகும். உன் சேவை மென்மேலும் தொடரட்டும்.

-ஏ.எம்.றிப்கா-முன்பள்ளி ஆசிரியை, சம்மாந்துறை-

திறனொளி சஞ்சிகை பற்றி உங்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்.
அபிமானிகள் அபிப்பிராயம் பகுதியில் பிரசுரிப்போம். எழுதி அனுப்ப மறவாதீர்கள் உங்களின் அபிப்பிராயம் திறனொளியின் வெற்றிக்கு வழி வகுக்கும்.

அபிமானிகள் அபிப்பிராயம்
திறனொளி
112, பிர்தௌஸ் பள்ளி வீதி
சம்மாந்துறை-03
ஈமெயில்: nowshadacareem@gmail.com



சம்மாந்துறை பிரதேச செயலக கலாசார அதிகார சபையின் "வருடாந்த கலாசார விழா" 2016.12.05ஆம் திகதி பிரதேச செயலக கலாசார நிலயத்தில் விமர்சையாக இடம் பெற்றது. சம்மாந்துறை பிரதேச செயலாளரும். பிரதேச செயலக கலாசார அதிகார சபையின் தலைவருமான எழுத்தாளர் கனம் ஏ.மன்சூர் அவர்களது தலைமையில் இடம் பெற்ற இவ்விழாவில் கலை கலாசார எழுத்தாக்கப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ-மாணவியர்களுக்கான தகைமைச் சான்றிதல்கள்.பரிசில்கள்வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டிருந்தனர். இடையிடையே நடனம். நாடகங்கள் என்று பல கலை. கலாசார நிகழ்ச்சிகளும் இடம் பெற்று பார்வையாளர்களை மகிழ்வித்தும் இருந்தன. இந்த விழாவில் பிரதேச உதவிச் செயலாளர் கலைஞர் எம்.எம். ஆரிக். கணக்காளர்களும் ஏ.எல். மஹ்றூப். கலாசார அதிகாரசபையின் துணைத் தலைவர் மாறன் யு. ஸெயின். கலாசார அதிகார சபையின் ஒருங்கிணைப்பாளரும் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தருமான. ஏ.எல். பரீனா முஸ்லீம் கலாசார உத்தியோகத்தர்களான கனம் எஸ்.எம்.எம். அஷாத்.இந்து கலாசார உத்தியோகத்தர். திட்டமிடல் உதவிப்பணிப்பாளர்களான கலைஞர் ஹம்சா . கலைஞர் மஜிது ஆகியோர் சமூகங் கொடுத்து விழாவைச் சிறப்பித்து இருந்தனர். ஊர்வலமாக பிரதமர்கள் அழைத்துவரப்பட்ட இந்த விழாவில் ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது

ஐ.நஸ்றுல்லாஹ்

## அறிவிப்பாளர்கள் தேவை



திறனொளி ஊடக வலையமைப்பின் சேவைகளை மேலும் விஷ்தரிக்கும் சமூக நன்நோக்கில் இணையத்தளத்தில் புதிதாய் உதயமாகவுள்ள ஆஸாத் FM இணைய வானொலிக்கு அறிவிப்பாளர்கள் தேவை. அறிவிப்பு மற்றும் நிகழ்ச்சித் தயாரிப்பு போன்றவற்றில் ஆர்வமுள்ளவர்கள் பயிற்சி பெறுனர்களாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளதால் தொடர்பு கொள்ளவும்


**0770548863 OR 0674905403**



# R.S.R TRADERS ட்ரேடர்ஸ்



வீட்டு வயரிங் பொருட்கள், நீர்க்குழாய் பொருத்தத் தேவையான பொருட்கள், PVC பைப் வகைகள் இன்னும் தரமான ஹாட்வெயார் பொருட்களையும் ஒரே இடத்தில் சகாய விலைகளில் பெற இன்றே நாடவேண்டிய இடம் ஆர்.எஸ்.ஆர். ட்ரேடர்ஸ்










**R.S.R.TRADERS**
312/2,Block 'J'
Malkampitty Road
Sammanthurai
Tell: 0776649653


# ஜி ஸ்டார் கோல்ட் ஹவுஸ்



நவ நாகரீக நகைகளின் அரங்கமாய் திகழும் ஜி ஸ்டார் கோல்ட் ஹவுஸில் தூய தங்க நகைகளை நவீன டிசைன்களில் வழங்குகிறது




ஒளி சிந்தும் நகைகளை நியாய விலைகளில் பெற்றுக்கொள்ள நினைவில் இருக்க வேண்டிய நகைச் சுரங்கம் ஜி ஸ்டார் கோல்ட் ஹவுஸ்



பழைய தங்கம் கூடிய விலைக்கு வாங்கப்படும்

**G STAR GOLD HOUSE**
115B, Fows Mawatha
Near jalaliya Jummah Mosque
Sammanthurai. 0776257456

# ஸாறா வெல்டிங் வேர்க் சொப்



கேட், ரோலிங் கேட், கிறில், ஏணிப்படிகள், கூரைகள், கூடாரங்கள்

வாகனங்களுக்கான டிங்கர் மற்றும் பெயின்ட், வெல்டிங் வேலைகள் அனைத்தையும் தரமானதாகவும் உறுதியுடனும் செய்து பெற்றுக்கொள்ள சிறந்த இடம்

**ஸாரா வெல்டிங் வேர்க் சொப்**
அம்பாறை வீதி,
சம்மாந்துறை.
0775566229

அங்கீகாரம் பெற்ற ஹொன்டா விற்பனையாளர்

# CYLON MOTORS



அனைத்து வகையான புத்தம் புதிய ஹொன்டா மோட்டார் சைக்கிள்களை சம்மாந்துறை, கல்முனை ஆகிய இடங்களில் கிளைகளைக் கொண்டுள்ள ஹொன்டா நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற விற்பனையாளராகத் திகழும் CYLON MOTORS இல் பெறலாம்

இப்போது புதிய அறிமுகம் HONDA CD-110



HONDA

**CYLON MOTORS**
Sammanthurai - 0771999892
Kalmunai - 0672226070
0779696800

இச்சஞ்சிகை: இல:112, பிர்தௌஸ் பள்ளி வீதி, சம்மாந்துறை-03. எனும் முகவரி திறனொளி ஊடக வலையமைப்பினால் வெளியிடப்படுகிறது.